# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION

# e – Bulletin

e – Bulletin No.QD 031 நாள்: 12.02.2026

**அறிவிக்கை எண் : 01/2026** **விளம்பர எண் : 730**

**டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜனவரி 2027 பருவத்தில் மாணவர்கள் (சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்) சேருவதற்காக 2026 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7- ஆம் தேதி அன்று நடத்தப்பெறும் தேர்வு**

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் ஜனவரி 2027_பருவத்தில் VIII- ஆம் வகுப்பில் மாணவர்கள் (சிறுவர்கள் மற்றும் சிறுமியர்கள்) சேருவதற்கான தேர்வு இந்திய நாட்டில் குறிப்பிட்ட சில மையங்களில் 2026-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7-ஆம் தேதி அன்று நடைபெறவிருக்கிறது. சென்னை நகரிலும் இத்தேர்வு நடைபெற உள்ளது. இத்தேர்வு எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்துத் தேர்வு, ஆங்கிலம், கணக்கு மற்றும் பொது அறிவு ஆகிய தாள்களைக் கொண்டது. கணக்குத்தாள் மற்றும் பொது அறிவுத் தாள் ஆகியன ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விடையளிக்கப்பட வேண்டும். நேர்முகத் தேர்வானது விண்ணப்பதாரர்களின் அறிவுக் கூர்மை, தனித்தன்மை போன்றவற்றை ஆராய்வதாக இருக்கும். எழுத்துத் தேர்வின் அடிப்படையில் தகுதியானவர் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மட்டும் நேர்முகத் தேர்வு நடத்தப்படும். நேர்முகத் தேர்வு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். .

2) இத்தேர்விற்கான விண்ணப்பப் படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பை " கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி , கர்ஹிகான்ட், டேராடூன் , உத்தரகாண்ட் - 248 003" என்ற முகவரியில் பின்வரும் முறைகளில் பெற்றுக் கொள்ளலாம்..

- <u>இணையவழி மூலம் (on-line payment)</u>: இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியின் இணையவழியான www.rimc.edu.in மூலமாக பொதுப் பிரிவினர் ரூபாய் 600/-ம் மற்றும் பட்டியல் மற்றும் பழங்குடி வகுப்பினர் ரூபாய் 555/-ம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். (கட்டணம் பெறப்பட்ட பின் விண்ணப்பப் படிவம், தகவல் தொகுப்பேடு மற்றும் முந்தைய தேர்விற்கான வினாத்தாள் தொகுப்பு ஆகியவை விரைவு அஞ்சல் வாயிலாக பெற்றுக் கொள்ளலாம்.
- <u>வரைவோலை மூலம் (By sending Demand Draft)</u>: கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி , கர்ஹிகாண்ட், டேராடூன் , உத்தரகாண்ட், அஞ்சல் குறியீட்டு எண் - 248 003 என்ற முகவரிக்கு விரைவு அஞ்சல் வாயிலாக எழுத்து மூலம் விண்ணப்பித்து "கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி நிதி" அவர்களுக்கு வரைவோலைக்குரிய கிளை எச்.டி.எப்.சி. வங்கி, பல்லூபூர் சௌக்,

டேராடூன் (வங்கிக் குறியீடு–1399) உத்தரகாண்டில் செலுத்தத்தக்க வகையில் பொதுப் பிரிவினர் ரூபாய் 600/- ம் மற்றும் பட்டியல் மற்றும் பழங்குடி வகுப்பினர் சாதிச்சான்றுடன் ரூபாய் 555/-க்கான வரைவோலையை அனுப்பி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

- **<u>குறிப்பு</u>**

  கமாண்டன்ட், இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி, கர்ஹிகாண்ட், டேராடூன் , உத்தரகாண்ட், அஞ்சல் குறியீட்டு எண் - 248 003 என்ற முகவரியை அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் தொடர்பு எண்ணைத் தட்டச்சு செய்தோ அல்லது தெளிவாக எழுதியோ அனுப்புதல் வேண்டும்.

3) விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேடு ஆகியன சென்னையிலுள்ள இத்தேர்வாணைய அலுவலகத்திலிருந்து விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படமாட்டாது. இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியின் விண்ணப்பப் படிவங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேலும், தனிப்பட்ட முறையில் அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள், ஒளிநகல் எடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அல்லது இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி ஹாலோகிராம் <u>(Hologram)</u> முத்திரையிடப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

4) அஞ்சல் துறையின் தாமதத்திற்கு இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி பொறுப்பல்ல. தவறான அல்லது முழுமையடையாத முகவரியால் விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேடு, போக்குவரத்தில் ஏற்படும் அஞ்சல் துறையின் தாமதம் அல்லது இழப்புக்கு இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரி பொறுப்பேற்காது.

5) எந்தவொரு சூழ்நிலையிலும் விண்ணப்பக் கட்டணம் திரும்பச் செலுத்தப்படமாட்டாது.

6) விண்ணப்பதாரர்களின் (சிறுவர்கள்/சிறுமியர்) பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 01-01-2027 அன்று 11½ வயது நிரம்பியவராகவும், 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். அதாவது அவர்கள் 02-01-2014-க்கு முன்னதாகவும் 01-07-2015-க்கு பின்னதாகவும் பிறந்திருக்கக் கூடாது. இந்த வயது வரம்பில் எந்த தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட இராணுவக் கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும் பொழுது, அதாவது 01-01-2027-ல் அங்கீகரிக்கப் பெற்ற பள்ளியில் <u>(Recognized School)</u> ஏழாம் வகுப்பு படிப்பவராகவோ அல்லது ஏழாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

7) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் (இரட்டிப்பு படியுடன்) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணயச் சாலை, பூங்கா நகர், சென்னை – 600 003 என்ற முகவரிக்கு 05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேர வேண்டும்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்